18-08-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 20-02-2001

## சிவஜெயந்தி என்பது விரதம் எடுப்பது மற்றும் அனைத்தும் சமர்ப்பணம் ஆவதின் நினைவுச் சின்னமாகும்

இன்று திருமூர்த்திகளை படைப்பவர் சிவபாபா தனது பூஜைக்குரிய சாலிகிராமங்களை சந்திப் பதற்காக வந்திருக்கின்றார். சந்திக்கவும் வேண்டும், இன்று கொண்டாடவும் வேண்டும். நீங்கள் அனைவரும் உலகில் நாலாபுறங்களிலும் பாப்தாதாவின் ஜெயந்தியை மிகவும் ஆர்வம்-உற்சாகத்துடன் கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்திருக்கிறீர்கள். தந்தையின் ஜெயந்தி கொண்டாட வந்திருக்கிறோம் என்று குழந்தைகளாகிய நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் குழந்தை களின் ஜெயந்தி கொண்டாட வந்திருப்பதாக தந்தை கூறுகின்றார். நீங்கள் அனைவரும் கூட தனது ஜெயந்தி, அலௌகீக பிறந்தநாள் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். முழு கல்பத் திலும் இவ்வாறு விடுபட்ட மற்றும் அன்பான பிறந்தநாள் ஒருபோதும் ஏற்படாது. தந்தையின் பிறந்தநாள் மற்றும் குழந்தைகளின் பிறந்தநாள் என்று முழு கல்பத்திலும் பார்த்திருக்கிறீர்களா? கொண்டாடி இருக்கிறீர்களா? ஏனென்றில் உலக மாற்றத்திற்கான காரியத்தில் சிவதந்தை பிரம்மா என்ற மூத்த சகோதரருடன் பிராமணர்களும் அவசியம் தேவை. பிராமணர்களின்றி யக்ஞம் வெற்றியுடையதாக ஆக முடியாது. ஆகையால் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்தநாள் ஒரே நாளாகும். ஆக குழந்தைகள் உள்ளப்பூர்வமாக தந்தைக்கு வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர், தந்தையும் ஒவ்வொரு பிராமணக் குழந்தைக்கு அலௌகீக பிறப்பிற்கு பலகோடி மடங்கை அதிகமாக உள்ளப்பூர்வமான ஆசிர்வாதங்களுடன் வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். (அனைவரும் கை அசைக்கின்றனர்) மிக்க நன்று. ஒரு கையினால் கை தட்டுவது நன்றாக இருக்கிறது, இரண்டு கைகளினால் அல்ல. மிகுந்த குஷி ஏற்படுகிறது அல்லவா! எனவே கை அசைப்பதை நிறுத்துவது கிடையாது.

உலகில் பக்தர்களும் கூட சிவஜெயந்தியை மிக விமரிசையாக கொண்டாடுகின்றனர். ஆனால் அவர்கள் ஒரு நாள் விழிப்புணர்வு மற்றும் ஒரு நாள் விரதமாக கொண்டாடுகின்றனர். குழந்தை களாகிய நீங்கள் அஞ்ஞான நித்திரையிலிருந்து விழிப்படையும் சங்கல்பம் ஒரு நாளிற்காக மட்டும் செய்யவில்லை. அவர்களும் விழிப்பாக இருக்கின்றனர், ஆனால் நீங்கள் ஒரு சங்கம யுகம் வைரத்திற்கு சமமான யுகத்தில் விழிப்புணர்வு செய்கிறீர்கள், செய்து கொண்டிருக்கி றீர்கள். விழிப்படைந்து விட்டீர்கள் தானே! இப்பொழுது மீண்டும் தூங்கி விடமாட்டீர்கள் தானே! அல்லது சிறிது தூங்கி விடுவீர்களா! தூங்கவில்லை என்றாலும் சிறிது தலை சாய்ந்து விடுகிறது. இந்த விழிப்புணர்வு அப்படிப்பட்டது, அதாவது சுயம் விழிப்படைவதுடன் மற்றவர் களையும் விழிப்படையச் செய்கிறீர்கள். வாழ்க்கையில் ஞானத்தை தாரணை செய்வது என்றால் இருளிலிருந்து வெளிச்சத்தில் வருவதாகும். இந்த அலௌகீக விழிப்பு அனைவருக்கும் பிடித்திருக்கிறது தானே! எப்போது பிறப்பு எடுத்தீர்களோ, ஜெயந்தி கொண்டாடினீர்களோ அப்போது என்ன என்ன விரதம் எடுத்துக்

கொண்டீர்கள்? நினைவிருக்கிறது தானே! நினைவு மட்டுமல்ல, நமது இயற்கையான வாழ்க்கையே விரதமாக ஆகிவிட்டது என்று குழந்தைகள் கூறுகிறீர்கள். தூய்மையான உணவு, தூய விவகாரம் மற்றும் தூய்மையான சிந்தனை வாழ்க்கையாகி விட்டது. ஒரு மாதத்திற்காக அல்ல, இரண்டு மாதத்திற்காக அல்ல, வாழ்க்கையே விரதம் தாரணை செய்யக் கூடியதாக ஆகிவிட்டது. இயற்கையாக ஆகிவிட்டது மற்றும் குணமாக ஆகிவிட்டது. தூய்மையான குணமாக ஆகிவிட்டது தானே! குணமாக ஆகி விட்டதா? அல்லது ஆக்க வேண்டியிருக்கிறதா? ஆகிவிட்டது தானே? தலை மட்டும் ஆட்டினால் போதும். ஆகிவிட்டதா? அசுத்த குணம் அழிந்து விட்டது மற்றும் தூய்மை வாழ்க்கையில் நிறைந்து விட்டது. இப்படிப்பட்ட வைரத்திற்கு சமமான சிவஜெயந்தி அல்லது சாலிகிராம் ஜெயந்தி கொண்டாடி விட்டீர்களா? நாலாபுறங்களிலும் உள்ள உள்நாடு, அயல்நாட்டில் உள்ள குழந்தைகளும் கூடவே கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தந்தையின் கூட மற்றும் உங்களுடன் அவர்களும் எவ்வளவு குஷியாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

இன்றைய நாட்களில் விசேஷமாக பக்தர்கள் உங்களது நினைவார்த்தமாக பலியும் கொடுக்கின்றனர். நீங்கள் அனைவரும் எண்ணம்-சொல்-செயலினால் தந்தையிடம் சமர்ப்பனம் ஆகிறீர்கள். அதன் நினைவார்த்தமாக பக்தர்கள் தன்னை பலியாக்குவது கிடையாது, ஆடு பலி கொடுத்து விடுகின்றனர். வேறு எதுவும் கிடைக்கவில்லையா? ஏன் ஆடு கிடைத்தது? இதன் இரகசியத்தையும் நீங்கள் அறிவீர்கள். ஏனெனில் தேக அபிமானத்தின் மிகப் பெரிய காரணம் நான் என்பதாகும். இந்த நான் என்பதை அர்ப்பணிக்கும் போது தான் பிராமணர்களாக ஆகியிருக்கிறீர்கள். ஆடு என்ன செய்யும்? மே மே (நான், நான்) என்று கத்தும். இந்த நான் என்பது தேக அபிமானத்தின் அடையாளமாகும். தேக அபிமானத்தின் நான் என்பது மிகவும் சூட்சமமாகவும் இருக்கிறது, விதவிதமாகவும் இருக்கிறது. முதலில் நான் என்று வருவது - நான் சரீரம், நான் இன்னாராக இருக்கிறேன். பிறகு சம்பந்தங்களில் மாட்டிக் கொள்ளும் விதவிதமான நான். பிறகு விதவிதமான பதவிகளுக்கான நான். அதை விட சூட்சமமானது தனது விசேஷதாவிற்கான நான், உயர்ந்த நிலையிலிருந்து கீழே கொண்டு வந்து விடுகிறது. ஒவ்வொருவரிடமும் விசேஷதா இருக்கிறது, ஸ்தூலத்திலோ, சூட்சுமத்திலோ எந்த விசேஷதா இல்லாத மனிதன் யாரும் கிடையாது. ஞானி வாழ்க்கையிலும் ஒவ்வொரு பிராமணனுக்குள் குறைந்தது ஒரு விசேஷதா அவசியம் இருக்கும். ஆனால் ஞானி வாழ்க்கையில் விசேஷதா பரமாத்மாவின் கொடுப்பினையாகும், பரமாத்மாவின் பரிசாகும். பரமாத்மாவின் கொடுப் பினையை தேக அபிமானத்திற்கு வசமாகி நான் என்பதில் கொண்டு வந்தால் - நான் இவ்வாறு இருக்கிறேன், இந்த ராயல் அபிமானம் மிகப் பெரிய நான் ஆகும். சமர்ப்பனம் ஆகியிருக் கிறீர்கள், ஆனால் பிறகு எதைப் பார்க்க வேண்டும்?

ஆசிரியர்கள் அனைவருக்கும் தங்களை என்ன கூறிக் கொள்கிறீர்கள்? சமர்ப்பனம் அல்லவா! ஆசிரியர்கள் அனைவரும் சமர்ப்பனம் ஆகிவிட்டீர்களா? சரி, இல்லறத்தில் இருப்பவர்கள் சமர்ப்பனம் ஆகிவிட்டீர்களா? ஆம் அல்லது இல்லை? பாண்டவர்கள் சமர்ப்பனம் ஆகிவிட்டீர் களா? மிக்க நன்று, வாழ்த்துக்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும்? சமர்ப்பனம் ஆகிவிட்டீர்கள், மிக்க நன்று. அடுத்து இதை சோதிக்க வேண்டும், என்னவென்று கூறட்டுமா?

சமர்ப்பனம் தான் ஆகிவிட்டோம், பிறகு என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். ஒன்று சமர்ப்பனம், அதன் பிறகு சர்வசமர்ப்பனம். சர்வ (அனைத்தும்) என்பதில் விசேஷ கோடிட வேண்டும். தனது மனம்-புத்தி-சன்ஸ்கார சகிதமாக சமர்ப்பனம். ஏனெனில் எந்த அளவிற்கு முன்னேறுகிறீர்களோ, முயற்சியில் தீவிர வேகத்திற்கான அடி எடுத்து வைக்கிறீர்களோ, எடுத்து வைத்துக் கொண்டும் இருக்கிறீர்கள். ஆனால் நிகழ்கால சூழ்நிலையின் படி பிராமண வாழ்க்கையிலும் கூட மனம் மற்றும் புத்தியின் மீது வீணானவைகளில் பாதிப்பு, கெட்டவைகள் அல்ல, கெட்டது அழிந்து விட்டது. ஆனால் வீணானவைகள் மற்றும் எதிர்மறையின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. ஆகையால் யதார்த்தம் மற்றும் சத்திய நிர்ணயம் செய்யும் உணரும் சக்தி குறைந்து விடுகிறது. புரிந்து கொள்வதன் மூலம் உணர முடிகிறது - ஆம், இது தவறு, இது சரியானது அல்ல. ஆனால் ஒன்று விவேகத்தின் ஆதாரத்தில் உணர்வது, மற்றொன்ற உள்ளப்பூர்வமாக உணர்வது. ஒரு விசயத்தை உள்ளப்பூர்வமாக உணர்ந்து விட்டால் உலகமே மாறினால் சுயம் மாறமாட்டார்கள். பழைய சன்ஸ்காரம் 63 பிறவிகளாக இருக்கின்ற காரணத்தினால் இயற்கையாக ஆகிவிட்டது. இதை வேறு ஒரு வார்த்தையின் இது தவறு கிடையாது, என்னுடைய குணம் என்று கூறுகிறோம். ஆக சில சன்ஸ்காரம் அழிகிறது, சில அமுங்கி இருக்கிறது, பிறகு வெளிப்பட்டு விடுகிறது. ஆனால் சர்வசமர்ப்பன் என்றால் - ஒவ்வொரு ஆத்மாவிற்காக மனதின் உணர்வு மற்றும் பாவணை மாறி விட வேண்டும். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், விதவிதமான ஆத்மாக்கள் இருக்கத் தான் செய்வர், கல்ப விருட்சம் அல்லவா, விதங்கள் இல்லையெனில் அழகு இருக்காது. ஆனால் ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் சுபபாவனை மற்றும் சுப விருப்பம் இருக்க வேண்டும். சுபமற்ற பாவனையும் மாற்றி சுபபாவனையாக வைக்க வேண்டும் அல்லது கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் சுப விருப்பம், இவர் அவசியம் மாறி விடுவார். இவர் மாறவே மாட்டார் என்று நினைக்கக் கூடாது. நீங்கள் அவருக்கு நீதிபதியாகி தீர்ப்பு கொடுக்க வேண்டாம் - இவர் மாறவே மாட்டார். இயற்கையையும் மாற்றி சதோ குணமாக ஆக்கியே தீருவோம் என்று சவால் விட்டிருக்கிறீர்கள். மாறுமா, மாறாதா என்ற கேள்வி கிடையாது, ஆக்கியே தீரவேண்டும். ஆக்கியே என்ற வார்த்தையை அடிகோடிட்டு குறிப்பிடுகிறார். ஆக இயற்கையை மாற்றி விடும் போது ஆத்மாவை மாற்ற முடியாதா? ஆத்மா இயற்கையின் புருஷன். இயற்கையை மாற்றி விடுவோம், புருஷர்களை மாற்ற முடியாது. ஏன்? நிகழ்காலத்தில் இந்த மனம்-புத்தி-சன்ஸ்காரம் சுயமாற்றம் மற்றும் அனைவரின் மாற்றம் - இது தான் சேவையாகும்.

இந்த ஆண்டு என்ன செய்ய வேண்டும்? என்று அனைவரும் கேட்கின்றனர். இரட்டை சேவை செய்ய வேண்டும். ஒன்று தன்னை சர்வசமர்ப்பன். உங்களது வாயுமண்டலம், உங்களது சூழ்நிலை, உங்களது சகவாசம், உங்களது உள்ளத்தின் உதவி, உங்களது உள்ளப்பூர்வ ஆசிர்வாதம் மற்றவர்களையும் எளிதாக மாற்றுவதில் உதவி செய்யும் அளவிற்கு தன்னை சமர்ப்பன் ஆக்கிக் கொள்ளுங்கள். அந்த அளவிற்கு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். சர்வசமர்ப்பனம் செய்ய வேண்டும். ஒன்று இந்த சேவை. மற்றொன்று மனித சேவை. ரிசல்ட் பார்க்கின்ற போது நாலாபுறங்களிலும் உள்நாடு, அயல்நாடுகளில் நகரங்களில் அனைத்து பிராமணக் குழந்தைகளும் இதுவரை

என்ன சேவை செய்திருக்கிறீர்களோ தந்தையின் அன்பில் மூழ்கி செய்திருக்கிறீர்கள், அதற்கு பாப்தாதா மிக மிக மிக வாழ்த்துக்கள் கொடுக்கின்றார். அடுத்து என்ன செய்ய வேண்டும்?

யார் பிராமணர்களாக ஆகியிருக்கிறார்களோ, பிராமணர்களும் விருத்தியாக வேண்டும், மேலும் தீவிர வேகத்தில் விருத்தி ஆக வேண்டும். மேலும் மனிதர்களுக்கு பிரியமான சேவை, விதவிதமான திட்டம் மூலம் சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, அது மிகவும் நன்றாக இருக்கிறது. இப்பொழுது விதவிதமான இடங்களில் சகயோகி ஆத்மாக்கள் நன்றாக நிமித்தம் ஆகியிருக்கின்றனர். சகயோகிகள் மிக நன்றாக இருக்கின்றனர். சகயோகம் என்பது ஒரு அடி, ஒரு அடி எடுத்து வைத்திருக்கின்றனர். ஆனால் அடுத்த அடி சகஜயோகி, கர்மயோகி. கர்ம யோகி அல்லது சகஜயோகியாகவும் சிலர் ஆகியிருக்கின்றனர். இதுவும் அடுத்த நிலையாகும். இப்பொழுது இப்படிப்பட்ட ஆத்மாக்கள் நடைமுறை சொரூபத்தில் மேடையில் நடிப்பு நடிக்க வேண்டும். மைக் மேடையில் இருக்கும் அல்லவா! ஆக மைக் ஆகி சேவை என்ற மேடையில் நடைமுறை சொரூபத்தில் அவசியம் வருவார்கள். நீங்கள் மைட் (சக்தி) ஆக இருக்கிறீர்கள், அவர்கள் மைக் ஆக இருக்கின்றனர். பிரம்மா பாபா அவ்யக்த ரூபத்தில் மைட் ஆக இருந்து குழந்தைகளாகிய உங்களை மைக் ஆக ஆக்கினார். அதே போன்று நீங்கள் மைட் ஆகுங்கள், நல்ல மைக் தயார் செய்யுங்கள். நல்ல நல்ல மைக் இருக்கின்றனர், வேகமாக செல்லக் கூடிய நம்பிக்கைக்குரியவர்கள் இருக்கின்றனர், இப்பொழுது அப்படிப்பட்ட ஆத்மாக்களின் தொடர்பை அதிகப்படுத்துவது அவசியமாகும். என்ன செய்வது, எப்படி செய்வது என்று அவர்கள் யோசிக்கின்றனர். மைட் ஆகி அவர்களுக்கு விதியை கூறுங்கள் - அவர்கள் லௌகீக தொழில் மற்றும் அலௌகீக சேவை இரண்டிலும் சமமாக இருந்து கடைசியில் வந்தவர்கள் வேகமாக, முதல் வரிசையில் வந்து விட வேண்டும். இவ்வாறு பிரத்ட்சயம் ஆக வேண்டும். தொடர்பு மற்றும் கரண்ட் கொடுத்தால் போதும், ஆன்மீக கரண்ட், வைபிரேசன், வாயுமண்டலம் என்ற கரண்ட் மற்றும் விதியாகும். சமமாக இருக்கும் வாழ்க்கையானது மிக நன்றாக மற்றும் எளிதாக இருக்கிறது என்பதற்கு நிமித்தமாக அவர்கள் ஆக வேண்டும். சரி தானே! என்ன செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொண்டீர்களா!

சிறிய சிறிய பூங்கொத்து தயார் செய்யுங்கள். பெரிய பூங்கொத்து இல்லையென்றாலும் 5 மலர்கள், 10 மலர்களின் பூங்கொத்து கொண்டு வாருங்கள். ஒவ்வொரு திசையின் பக்கமும் பாப்தாதாவின் பார்வை இருக்கிறது. கேட்டீர்களா! பாண்டவர்கள் கேட்டீர்களா? மிக்க நன்று.

இரட்டை அயல்நாட்டினர் குதிக்கவில்லை, ஆனால் பறந்து கொண்டிருக்கின்றனர். ஆக முதல் பூங்கொத்து அயல்நாட்டினர் கொண்டு வருவீர்களா? அல்லது பாரதவாசிகள் கொண்டு வருவீர்களா? யார் கொண்டு வருவீர்கள்? அல்லது இருவரும் சேர்ந்து கொண்டு வருவீர்களா? ஒருபுறம் அயல்நாடு, மற்றொரு புறம் பாரதம். இரண்டு பூங்கொத்து மேடைக்கு அழைத்து வருவீர்கள். மற்ற விழா கொண்டாடுவது போன்று பாரதம் மற்றும் அயல்நாடு இரண்டு பூங்கொத்திற்கான விழாவும் கொடுவீர்கள். சரி தானே? அயல்நாட்டினர் என்ன நினைக்கிறீர்கள்? சரி தானே. அடுத்த சீசனில் அழைத்து வருவீர்களா?

அழைத்து வருவீர்களா? பாரதவாசிகள் அழைத்து வருவீர்களா? லௌகீக் மற்றும் அலௌகீக தொழில் இரண்டும் சமமாக உடையவர்கள். உங்களைப் போன்று வெறும் பிராமண வாழ்க்கை வாழ்ப்பவர்களாக அல்ல. லௌகீகமும் இருக்க வேண்டும், அலௌகீகமும் இருக்க வேண்டும். அவர்களது பிரபாவம் அதிகமாக இருக்கும். உங்களிடம் திருஷ்டி பெறுவதற்கு வருவார்கள். நல்லது - என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள், ஜெயந்தி?

பெயர் யோசித்துக் கொண்டிருக்கிறாயா என்ன? நிர்மலா, மோகினி என்று பெயர் யோசித்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா! இங்கு பாண்டவர்களைப் பாருங்கள், பாரதத்தின் பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. சுபானுஅல்லா! இங்கு பாருங்கள் சிலர் அமர்ந்திருக்கின்றனர். பிரையன் சகோதரர் அமர்ந்திருக்கிறார் அல்லவா! (ஆஸ்திரேலியாவின் பிரையன் சகோதரர்) பூங்கொத்து தயார் செய்ய வேண்டும் அல்லவா! மிக நல்ல நல்ல ஆத்மாக்களின் பெயர்களை கொடுக்கிறீர்கள், என்.சீ.ஓ., நல்லது. அயல்நாட்டின் என்.சீ.ஓ க்கள் கை உயர்த்துங்கள். என்.சீ.ஓ ஆவது எளிது கிடையாது. அதிசயம் செய்து காட்ட வேண்டியிருக்கும். செய்ய முடியும், ஒன்றும் பெரிய விசயம் கிடையாது. ஏனெனில் பூமி தயாராக இருக்கிறது. விதையும் தெளிக்கப்பட்டிருக்கிறது. பாலனை என்ற தண்ணீர் கொடுத்தால் போதும். இப்பொழுது விதைக்கு பாலனை என்ற தண்ணீர் தேவை. நல்லது.

ஆசிரியர்களும் அதிகம் வந்திருக்கிறீர்கள். ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்கள். நீங்கள் தான் சேவை செய்திருக்கிறீர்கள் அல்லவா! சேவைக்கான வாழ்த்துக்கள். நல்லது. குஜராத்தின் நிலை என்ன? (குஜராத்தில் மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டது). பூகம்பம் குஜராத்திலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது. அதிகமாக குஜராத்தில் ஆகியிருக்கிறது, அயல்நாட்டிலும் சிறிது ஆரம்பமாகியிருக்கிறது. பயப்படவில்லை தானே! பூமி அசைந்தாலும் உள்ளம் அசைவதில்லை தானே! எங்கு பூகம்பம் ஏற்பட்டதோ, நஷ்டம் ஏற்படுகிறது. அங்கிருந்து வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள். அகமதாபாத்திலிருந்து வந்தவர்களும் எழுந்து நில்லுங்கள். நல்லது. உள்ளம் அசைந்ததா? பூமி அசைந்ததா? என்ன நடந்தது? உள்ளம் சிறிது அப்படி, இப்படி என்று ஆனதா? ஆகவில்லை. புத்திசாலிகள். குழந்தைகள் தனது தைரியம் மற்றும் தந்தையின் குடை நிழல் மூலம் தனது ரிகார்ட் நன்றாக வைத்திருப்பதை பாப்தாதா பார்த்தார். யாரும் தோல்வி அடையவில்லை. அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டனர், சிலர் குறைவாக, சிலர் அதிகம். ஒவ்வொரு இடத்திலும் வரிசைக்கிரமம் ஏற்படத் தான் செய்கிறது. ஆனால் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். வாழ்த்துக்கள். அதிகம் பாதிப்படைந்த இடத்திலிருந்து யார் வந்திருக்கிறீர்கள்? (ஒன்று புஜ், மற்றொன்று பஜாவிலிருந்து ஒரு சகோதரி வந்திருக்கிறார்). நல்லது. புஜ்ஜில் ஆயிரம் புஜங்கள் உடையவருடன் நீங்கள் இருந்தீர்கள். நல்லது, சோதனைத்தாளில் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். மிக நன்றாக செய்தீர்கள். வரும் நாட்களிலும் அசையாமல் இருக்க வேண்டும். இப்பொழுது இவ்வாறு ஆகிக் கொண்டே இருக்கும். பயப்படக் கூடாது. (தினமும் ஏற்படுகிறது). ஏற்பட விடுங்கள். மாற்றம் ஏற்பட வேண்டும் அல்லவா! இயற்கையும் தனது வேலை செய்யும் அல்லவா! மனித ஆத்மாக்கள் இயற்கையை தமோ குணமுடையதாக ஆக்கி விட்டார்கள் எனில் அதுவும் தனது காரியம் செய்யும் அல்லவா! ஆனால் ஒவ்வொரு விளையாட்டையும், நாடகத்தின் விளையாட்டில் இதுவும் ஒரு விளையாட்டு.

விளையாட்டை பார்த்து தனது மனநிலையை முன்பின் ஆக்கிக் கொள்ளக் கூடாது. மாஸ்டர் சர்வசக்திவான் ஆத்மாக்களுக்கு வெளிப் பிரச்சனையானது சுய ஸ்திதியை பாதிக்கக் கூடாது. மேலும் ஆத்மாக்களை மானசீக குழப்பங்களிலிருந்து விடுவிப்பதற்கு நிமித்தம் ஆகுங்கள். ஏனெனில் மன குழப்பத்தை நீங்கள் தியானத்தின் மூலம் தான் போக்க முடியும். மருத்துவர்கள் தங்களது வேலை செய்வர், விஞ்ஞானிகள் தங்களது காரியம் செய்வர், அரசாங்கள் தங்கள் காரியம் செய்யட்டும், உங்களது வேலை மன குழப்பங்கள், டென்சன் போக்க வேண்டும். டென்சன் அற்ற வாழ்க்கையை தானம் கொடுங்கள். உதவி செய்யுங்கள். நிகழ்காலத்தில் உள்நாடு, அயல்நாட்டினர் சகயோகியாகி உதவி செய்து கொண்டிருக்கின்றனர் அல்லவா! இவ்வாறு மிக நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர். எந்த தேசத்தினர்களாக இருந்தாலும் பாரத தேசத்தின் மீது அன்பு இருக்கிறது என்பது இதன் மூலம் நிரூபனம் ஆகிறது. ஒவ்வொரு அவரவர்களது காரியம் செய்து கொண்டிருக்கின்றனர், நீங்கள் உங்கள் காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். தீ விபத்து ஏற்படும் போது தீயணைப்பவர்கள் பயப்படமாட்டார்கள், அணைப்பார்கள். நீங்கள் அனைவரும் கூட மன குழப்பம் என்ற தீயை அணைக்கக் கூடியவர்கள். நல்லது.

குஜராத் உறுதியாக இருக்கிறது தானே! ஆயிரம் புஜங்களுடையவரின் குடைக்குள் இருக்கிறீர்கள். எங்கு இருந்தாலும், இப்பொழுது குஜராத்தைப் பார்த்து அனுபவிகளாக ஆகிவிட்டீர்கள். எங்கு வேண்டுமென்றாலும் வரட்டும். இயற்கையை யாரும் வர வேண்டாம் என்று கூற முடியாது. குஜராத்தில் வரட்டும், அபுவில் வரக் கூடாது, மும்பையில் வரக் கூடாது என்று கூற முடியாது. அதற்கு சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அனைவரும் தங்களது சுய ஸ்திதியை ஆடாது, அசையாது மற்றும் தனது புத்தி, மன தொடர்பை தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். தொடர்பு தெளிவாக இருக்கும் போது தூண்டுதல் (டச்சிங்) கிடைக்கும். அவர்களுடையது தந்தியற்ற தொடர்பு (வயர்லெஸ்), உங்களுடையது விகாரமற்ற புத்தி (வைஸ்லெஸ்) என்பதை பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார். என்ன செய்ய வேண்டும், என்ன நடக்க வேண்டும் என்ற நிர்ணயம் தெளிவாக மற்றும் விரைவாக ஏற்படும். வெளியில் செல்ல வேண்டும், உள்ளேயே அமர்ந்திருக்க வேண்டும், வாசற்படியில் அமர்ந்திருக்க வேண்டும், மாடிக்குச் சென்று அமர வேண்டும் என்றெல்லாம் யோசிக்காதீர்கள். எங்கு பாதுகாப்பு இருக்குமோ அங்கு தான் உங்கள் கால் பாதங்களும் செல்லும். பயப்படக் கூடாது, ஒருவேளை பயம் ஏற்பட்டால் உங்களுடைய மதுபன் வீடு இருக்கிறது. பயப்படாதீர்கள். இது ஒன்றுமே கிடையாது, இன்னும் நிறைய நடக்க இருக்கிறது, பயப்படாதீர்கள், விளையாட்டாகும். மாற்றம் ஏற்பட்டே ஆக வேண்டும். விநாசம் அல்ல, மாற்றம் ஏற்பட வேண்டும். அனைவரிடத்திலும் வைராக்கிய விருத்தி ஏற்பட்ட ஆக வேண்டும். கருணையுள்ளம் உடையவராகி சர்வசக்திகளின் முலம் சக்தி கொடுத்து கருணை காட்டுங்கள். புரிந்ததா! நல்லது.

இப்பொழுது ஒரு விநாடியில் மனம் மற்றும் புத்தியை ஒருநிலைப்படுத்த முடியுமா? ஸ்டாப் என்றதும் ஸ்டாப் ஆகிவிட வேண்டும். இப்பொழுது ஒரு விநாடிக்கு மனம் மற்றும் புத்தியை பிந்து, பிந்துவில் கலந்து விடுங்கள். நல்லது. (பாப்தாதா டிரில் செய்வித்தார்).

நாலாப்புறங்களிலும் உள்ள அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கு, நாலாபுறங்களிலும் சதா திட சங்கல்பம் என்ற விரதம் கடைபிடிக்கக் கூடிய உறுதியான ஆத்மாக்களுக்கு, நாலாபுறங்களிலும் தைரியம்-உற்சாகத்துடன் சேவை மற்றும் மனித நன்மைக்கான சேவை செய்யக் கூடிய மகான் சேவாதாரி ஆத்மாக்களுக்கு, இன்றைய சிவஜெயந்தியின் வைரத்திற்கு சமமான ஜெயந்தி, தனிப்பட்ட மற்றும் அன்பான ஜெயந்திக்கான வாழ்த்துக்கள். மேலும் ஆசிர்வாதத்தின் கூடவே அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : தந்தையின் அன்பை உள்ளத்தில் தாரணை செய்து அனைத்து ஈர்ப்பிலிருந்து விடுபட்டு இருக்கக் கூடிய உண்மையான அன்புடையவர் ஆகுக.

தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான அன்பு கொடுக்கின்றார். ஆனால் குழந்தைகள் தங்களது சக்தியின் அநுசாரமாக அன்பை தாரணை செய்கின்றனர். யார் அமிர்தவேளை என்ற ஆதி நேரத்தில் தந்தையின் அன்பை தாரணை செய்து விடுகிறார்களோ, உள்ளத்தில் பரமாத்ம அன்பு கலந்திருக்கும் காரணத்தினால் வேறு எந்த அன்பும் அவர்களை ஈர்க்க முடியாது. ஒருவேளை உள்ளத்தில் முழு அன்பு தாரணை செய்யவில்லையெனில் உள்ளத்தில் இடம் இருக்கின்ற காரணத்தினால் மாயை வித விதமான ரூபத்தில் அநேக அன்பில் ஈர்த்து விடும். ஆகையால் உண்மையான அன்பானவர் ஆகி பரமாத்ம அன்பில் நிறைந்திருங்கள்.

சுலோகன்: தேகம், தேகத்தின் பழைய உலகம் மற்றும் சம்பந்தங்களிலிருந்து விடுபட்டு பறக்கக் கூடியவர்கள் தான் இந்திரபிரஸ்த நிவாசிகள் ஆவர்.

குறிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை, அகில உலக யோகா தினமாகும். அனைத்து பிராமணர்களும் குழு ரூபத்தில் மாலை 6.30 மணியிலருந்து 7.30 மணி வரை விசேஷமாக கருணை உள்ளமுடைய தந்தையுடன் தனது மாஸ்டர் கருணை உள்ள சொரூபத்தில் நிலைத்திருந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் தூய்மையின் பலம் கொடுங்கள். தூய வைபிரேசன் சூழ்நிலைகளில் பரப்பும் சேவை செய்யுங்கள்.